
மலர் 10 ஆனி இதழ் 2

# வெற்றிமணி

சிறுவர் மாத இதழ்



யாழ்ப்பாணம் பஸ் நிலையம்

கௌரவ ஆசிரியர் :
குரும்பசிட்டி மு. க. சுப்பிரமணியம்

1-6-72

விலை சதம் 30

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடிடு கண்மணியே!

ஆடிடு கண்மணியே — தோழருடன்
ஆடிடு கண்மணியே! (ஆ)

பாடிக் குதித்து நடித்துப்
பக லெல்லாம் (ஆ)

மேகத்தைக் காண்பசுந்
தோகை மயிலென (ஆ)

திங்களைக் கண்டுள்ளம்
பொங்குங் கடலென (ஆ)

காற்றினில் ஆடிடுங்
கற்பகக் கொம்புபோல் (ஆ)

கிட்டி பாண்டி கிளித்
தட்டு சடுகுடு (ஆ)

மணல்வீடு கட்டி
மகிழ்ந்து மனம்போலே (ஆ)

மோகனப் பூங்குழல்
வேகமாய் ஊதியே (ஆ)

— சுத்தானந்த பாரதியார்

## அகில இலங்கை மாணவர் சிறுகதைப் போட்டி முடிவு

பரிசு பெறுபவர்: **செல்வன் மு. நாராயணமூர்த்தி**

10 A, இந்துக் கல்லூரி — யாழ்ப்பாணம்.

இவருக்கு ஈழத்து எழுத்தாளர்களின் இலக்கிய சிருஷ்டிகள் பரிசாக வழங்கப்படும்.

— ஆசிரியர்

# தேரின் தத்துவம்

— பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை —

''தேவாலயமானது எங்கும் வியாபகராய் மறைந்திருக்கும் கடவுள் தம்மை ஆன்மாக்கள் வழிபட்டு உய்யும் பொருட்டு சாந்நித்தியராய் எழுந்தருளியிருக்கும் இடமாம்'' என்று ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் விளக்கியுள்ளார்கள். ஆலயங்கள் நித்தியம், நித்தியாங்கம், நைமித்திகம், நைமித்திபாங்கம், காமிகம், காமிகாங்கம் என்னும் ஆறு உறுப்புக்களாலும் நடத்தப்படும் நைமிகத்துள் ஒன்று தான் மகோற்சவம்.

உற்சவம் என்னும் சொல்லுக்கு மேலான ஞானத்தையும், போக மோட்சத்தையும் கொடுப்பதென்பது ஒரு கருத்து. சிவபெருமான் ஐந்தொழில்களையும் செய்து உயிர்களைக் காக்கும் முறையைத் திருவிழாக்கள் வெளியிடுகின்றன. இவற்றுட் கொடியேற்றம் வரையுள்ள கிரியைகள் படைத்தலையும், வாகனத் திருவிழாக்கள் காத்தலையும், தேர்த் திருவிழா அழித்தலையும், மௌனோற்சவம் மறைத்தலையும், தீர்த்தம் அருளலையும் குறிக்கும்.

தேவாலயங்களில் நடைபெறும் இரதோற்சவத்தில் உபயோகிக்கப்படும் தேரின் தத்துவங்கள் யாவை என்பதை சதாவதானம் நா. கதிரவேற்பிள்ளை அவர்கள், சிவஸ்ரீ ச. குமாரசாமிக் குருக்கள் முதலான சைவ அறிஞர்கள் அழகாக விளக்கியுள்ளார்கள்.

சிவபெருமான் சூரிய சந்திரர்களைச் சக்கரங்களாகவும் சரம், அசரம் ஆகிய பொருட்களைத் தேரின் ஒவ்வொரு உறுப்புக்களாகவும், நான்கு வேதங்களைக் குதிரைகளாகவும் அமைத்த பூமியாகிய தேரில் மேருவை வில்லாகவும் வாசுகியை நாணாகவும் விஷ்ணுவை அம்பாகவும் அக்கினி தேவனை அம்பின் கூராகவும் கொண்டு எழுந்தருளி, பிரமாவாகிய சாரதி பிரணவமாகிய சவுக்குக்கொண்டு செலுத்திச்சென்று புன்முறுவல் செய்த சமயத்தில் அப் புன்முறுவ லக்கினியினால் முப்புரங்களும் நீறாயின. சிவபக்திமான்களாகிய விரத்தன், பரமயோகன், குணபரன் என்னும் மூவரும் எரியாதிருந்தனர். அவர்களுக்குத் தம்பதம் அளித்தருளினார். இதனையே இரதோற்சவம் உணர்த்துகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் தேர் வடிவம் சரீரத்தைக் குறிப்பதாம். தேரிற் காணப்படும் நான்கு சிங்கங்கள் ஆன்மாக்களின் சீவகாருண்ணியம் இல்லாத லோப குணத்தையும், பிரபஞ்ச ஆசையையும், விபரீத குணத்தையும் அகங்காரத்தையும் குறிக்கும். எட்டு யாளிகள் ஆன்மாவின் அஞ்ஞானம், அபிமானம், ராகாதிகுணம், துக்கம், விடயப்பற்று, பலவித கன்மம், உபாதி. அவஸ்தை என்னும் எட்டுவித அனுபவங்களையும் குறிக்கும். கொடிகள் தத்துவங்களைக் குறிக்கும். மணிகள் சாத்திர அறிவினால் உண்டாகும் பாச ஞானத்தைக் குறிக்கும். குஞ்சங்கள் வாகுமாலை முதலாயின ஆன்மாக்கள் மனச்சஞ்சலத்தினால் எழுவகைப் பிறப்பில் எண்பத்தினான்கு லட்ச யோனி பேதங்களாக மாறி மாறி அடையும் அவத்தையைக் குறிக்கும்.

தேரின் உறுப்புக்கள் பூதப்பார், கன்னிலப்பார், கபோதப்பார், ஆனைத்தொட்டிப்பார், அச்சப்பார், அச்சப்பூத்தலைப்பார், பூத்தலைப்பார், இரண்டாவது நிலம், சிம்மப்பூத்தலைப்பார், மூன்றாவது நிலம், நாகத்தலைப்பார், விஸ்தாரப்பார், தேவாசனம், சிம்மாசனம், கம்பங்கள், பண்டிகை, கர்ணக்குடம், மணிமுடி என்பனவாம்.

இவ்வாறு உண்மைப் பொருள்களை அறிவித்து நிற்கும் மிக்க மகத்துவம் வாய்ந்தது இரதம் என்பது உணரப் படுகின்றது.

## மாணவர் மன்ற அங்கத்தவர்கள்

121. S. A. அப்துல் கப்பார், பாத்திமாக் கல்லூரி, கல்முனை.
122. உம்மு சல்மா, மூஸ்லீம் வித்தியாலயம், கலப்பிட்டிய.
123. க. து. அமிர்த மோகனா, முஸ்லீம் வித்தியால., கலப்பிட்டிய.

# ஒரு சூரியோதயம்

— பண்டிதர் இ. நமசிவாயம் —

''வாய் தந்தேனென்றேனினி யானே அது மாற்றேன்'' என்று கைகேசிக்கு அவள் கேட்ட வரங்கள் இரண்டினையும் ஈந்த 'பொய்ச் சொற்பேணா வாய்மொழி மன்னனாகிய தசரதன் அவ்வரங்களில் ஒன்றனால் இராமன் வேயுயர் கானம் போயினன் என்பதைச் சுமந்திரன் கூறக்கேட்ட அப்பொழுதே யாவிபோனான். இந்தத் துன்ப நிகழ்ச்சிக்கிடமாகிய இராக்கழியச் சூரியோதயம் ஆகின்றது. சந்தர்ப்பத்தோடு பொருந்த வருணனைகள் செய்வதில் சாமர்த்தியம் மிக்க கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பர் இவ் வருணனையை எங்ஙனம் அமைத்துக் கொண்டார் என்பதனைக் காணச் சிறிது எத்தனிப்போம்.

தசரதன் இறந்ததும் அயோத்தி அரசனற்ற நாடாகி விட்டது. தசரதன் மக்கள் எவரும் அப்போது அங்கில்லை. அதனால் அரச நியமனஞ் செய்யமுடியாத ஒரு நிலை ஏற்பட்டுவிட்டது. அரச நியமனமின்றி இருத்தலும் முறைமையன்று. இச் சந்தர்ப்பத்தில் நிகழ்ந்த சூரியோதயத்தைத் தமது சாதுரியத்தால் அவ்வரச நியமனத்தோடு மிகவும் பொருந்த வருணிப்பதில் முயன்று வெற்றிகண்டார் கம்பநாட்டாழ்வார்; அவ் வருணனைச் செய்யுள்,

''மீனீர் வேலை முரசியம்ப
விண்ணோரேத்த மண் ணிறைஞ்சத்
தூநீர் ஒளிவாள் புடையிலங்கச்
சுடர்த்தே ரேறித் தோன்றினான்
வானே புக்கான் அரும்புதல்வன்
மக்கள் அகன்றார் வருமளவும்
யானே காப்பன் இவ்வுலகை
என்பான் போல எறிகதிரோன்''

என்பது. எறிகதிரோன் 'அரும்புதல்வன் வானே புக்கான். மக்கள் அகன்றார். வருமளவும் இவ்வுலகை யானே காப்பன்' என்பான்போல, மீனிர்வேலை முரசியம்ப, விண்ணோரேத்த, மண்ணிறைஞ்ச, தூநீர் ஒளிவாள் புடையிலங்கச் சுடர்த்தேர் ஏறித் தோன்றினான் என்பது கொண்டுகூட்டு.

வீசுகின்ற கிரணங்களை யுடையவனாகிய சூரியன் 'எனது அருமை மகனாகிய தசரதன் சுவர்க்கமே சென்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றடைந்தான். அவனது மக்கள் கேகய நாடும் காடுமாகிய இடங்களுக்குச் சென்றுவிட்டார்கள். அம் மக்கள் வரும் வரையும் இவ்வுலகை நானே காப்பேன்' என்று கூறுவான் போல; மீனையும் நீரையுமுடைய கடலாகிய முரசவாத்தியம் ஒலிப்பவும், தேவர்கள் துதிக்கவும், மண்ணுலகத்தார் வணங்கவும், பரிசுத்தமாகிய தன்மையையுடைய ஒளியாகிய வாள் தன் பக்கத்தில் விளங்கவும் ஒளி பொருந்திய தேரில் ஏறி உதயமானான் என்பது அச்செய்யுளின் பொருள்.

தசரதன் குல முதல்வன் சூரியன். ஆதலால் சூரியன் தசரதனைத் தன் மகன் என்கின்றான். ''ஞாயிறன்ன வாய்மையும்'' என வாய்மையுடைமையாற் போற்றப்படுபவன் சூரியன். அதனால் தன்போன்று வாய்மை காத்த தசரதனை அரும்புதல்வன் என்று அருமையும் உரிமையும் தோன்றக் கூறுகின்றான். வாய்மை காத்த தன் மகன் நிச்சயம் சுவர்க்கம் புகுவான்; ஆதலின் வான் புக்கான் என்னாது வானே புக்கான் என்கிறான். தசரதன் இறந்தபின் அவனரசு அவன் மக்கட்குரியது. ஆனால் மக்களோ அந் நாட்டில் இல்லை. ஆதலால் இடைக்காலத்துக்கு அரசனொருவன் தேவைப்படுகிறான். அவ்வரசுக்கு உரிமை தனக்கு மாத்திரமே உண்டு. பிறர்க்கில்லை ஆதலால் தானே காத்தல் வேண்டும் என்பவனாய் 'யானே காப்பன்' என்கின்றான். தனக்கு இம் மண்ணுலகைக் காத்தல் பெரியதொரு காரியமன்று என்பான். 'இவ்வுலகை' என இகழ்ச்சிப் பொருள் தோன்றக் கூறுகின்றான். தான் இவ்வுலகு காத்தல் தன் பயன் கருதியன்று; தன் குலத்தார்க்கு உதவி செய்தல் அவ்வளவிற்கே என்பான். அகன்ற மக்கள் வருமளவும் என்கின்றான். இங்ஙனம் சூரியன் கூறியதுபோலக் கூறிய புலவர் பெருமான் அச்சூரியனுக்கு அரசனுக்குரிய அடையாளங்களும் இருப்பதாக, அணிவகையாலும் உண்மை வகையாலும் காட்டிய சாதுரியத்தையும் நோக்குவோம்.

அரசன் செல்லுங்கால் தேரிற் செல்லுதலும் - முரசவாத்தியம் ஒலித்தலும், கண்டோர் வணங்கலும், வாட்படை மருங்கே விளங்கலும் உளவாதல் போலச் சூரியனுக்கும் அவை உள என்று காட்டுகிறார். சூரியன் ஒற்றையாழித் தேரில் செல்பவன் என்பது பல நூல்களிலும் காணக்கூடி



யது. ஆதலால் தேரிற் செல்லல் சூரியனுக்கு உண்மையினமைந்தது. சூரியன் தோன்றும்போது கடல் மிக்கொலிப்பது இயல்பு. முழங்கல் ஒற்றுமை பற்றிக் கடலை முரசாக உருவகித்து முரசொலி கொள்ள வைத்தார். சூரியோதயத்தில் சந்தியா வந்தனஞ் செய்யப்படுதலின் கண்டோர் வணங்கலும் அவனுக்கு உண்மையினமைந்தது. சூரியன் இருட் பகை யறுத் தோட்டற்குக் கருவியாதலின் அவனுடைய ஒளியை வாளென உருவகித்து வாட் படையுங் கொள்ளவைத்தார். 'வாள் போழ் விசும்பு' என்பது திருமுருகாற்றுப் படை. இனி வாள் என்பதற்கு ஒளியென்றே பொருள் கொண்டு ஒளிவாள் என்பது இரு பெயரொட்டுப் பண்புத் தொகையின் வகையென்று கொண்டு, எழுத்தொப்புமை பற்றி அது வாட்படையைக் குறித்தது என்று கொள்ளலும் பொருந்தும். மேலும் நுணுகி நோக்கவல்லார்க்கு விரிந்து பொருள் தோன்றும் இச் செய்யுள்போன்ற செய்யுள்கள் மலிந்து கிடப்ப இராமாயணம் செய்தலானன்றே. 'விருத்தமென்னும் ஒண்பாவுக்குயர் கம்பன்' என்றும், 'கல்வியிற் பெரியன் கம்பன்' என்றும், 'கவிச்சக்கரவர்த்தி' என்றும் கம்பர் பெருமான் போற்றப்படலாயினர் என்க.

## மாணவர்க்கு!

வெற்றிமணி ஒரு பொழுது போக்குக்காகவோ அன்றுடைய செய்திகளை அறிவதற்காகவோ வாசித்துவிட்டு வீசிவிடக்கூடிய பத்திரிகையல்ல. சிறுவர்களும் பெரியவர்களும் பலகாலம் வைத்துப் படிக்கப் பாதுகாக்கக் கூடிய விஷயங்கள் அடங்கிய பத்திரிகையாகும்.

பரீட்சை எடுக்கும் மாணவர்களுக்காகப் 'பரீட்சையிற் சித்தியடைவது எப்படி?' என்ற அருமையான கட்டுரையைத் தொடர்ந்து எழுதிய ஆசிரியர் திரு. வி. கந்தவனம் பீ. ஏ. அவர்கள் ஒன்பதாந்தர, பத்தாந்தர மாணவர்கள் பயனடையக் கூடிய கட்டுரைகளை இந்த இதழ் தொடக்கம் எழுதுவார். முதலாவது கட்டுரை 'நான் விரும்பும் நூல்' வெளிவருகின்றது.

— ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் விரும்பும் நூல்

வி. கந்தவனம் பி. ஏ.

நான் விரும்பும் நூல் தெய்வப் புலவராம் திருவள்ளுவர் அருளிச்செய்த திருக்குறள் ஆகும். எட்டாம் வகுப்பிலே தமிழ்மொழியில் அதிக புள்ளிகள் பெற்றமைக்காக இந்நூல் எனக்குப் பரிசாகக் கிடைத்தது. அன்று முதல் இந்நூலை ஊன்றிக் கற்கலானேன். அருமையான நடைமுறைக் கருத்துக்களைக் கொண்ட இந்நூல் எனது நெஞ்சைக் கொள்ளை கொண்டுவிட்டது. அறிஞர்கள் பலரும் திருக்குறளைப் பற்றிச் செய்திருக்கும் ஆராய்ச்சிகளையும், கூறியிருக்கும் கருத்துக்களையும் ஆர்வ மேலீட்டினாற் படித்தேன். தமிழ்மொழியிலே ஈடிணையற்று விளங்கும் நூல் திருக்குறளே என்பதை உணர்ந்தேன்.

திருக்குறளில் நூற்றிமுப்பத்து மூன்று அதிகாரங்கள் உள்ளன. ஒவ்வோர் அதிகாரத்திலும் பப்பத்துக் குறட்பாக்களாக மொத்தம் ஆயிரத்து முந்நூற்றி முப்பது குறட்பாக்களைக் கொண்டது இந்நூல். இதில் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என மூன்று பெரும் பிரிவுகள் உள்ளன; பாயிரம், இல்லற இயல், துறவற இயல், அரசியல், அங்க இயல், ஒழிபியல், களவியல், கற்பியல் என்னும் உட்பிரிவுகளும் உள்ளன.

திருக்குறள் மூன்று பிரிவுகளைக் கொண்டமையால் **முப்பால்** என்றும், மனித குலத்தை உய்விக்கவல்ல நெறியைப் புகட்டுவதனால் **தெய்வநூல்** என்றும், என்றைக்கும் உண்மையான, எக்காலத்துக்கும் பொருந்தக்கூடிய கருத்துக்களை உள்ளடக்கியிருப்பதாற் **பொய்யாமொழி** என்றும், அழைக்கப்படுகின்றது. தமிழர் பண்பாட்டோடு கூடிய நீதிகளைக் கொண்டு, இது ஒரு வேதம் போன்று விளங்குவதால் இதனைத் **தமிழ் மறை** என்றும் அழைப்பர். இந்நீதிகள் தமிழர்க்குமட்டுமல்லாது உலகிலுள்ள அனைவருக்கும் பொருந்தும் வகையிற் கூறப்பட்டுள்ளன. இச் சிறப்புக் கருதி **பொது மறை** என்ற பெயரும் இதற்கு எழலாயிற்று. இந்த அரிய நூலுக்குப் பலர் உரை எழுதியுள்ளனர். அவர்களுள் பரிமேலழகர் செய்த உரையே சாலச் சிறந்ததென்று போற்றப்படுகின்றது.



திருக்குறளிற் கூறப்பட்டுள்ள அறிவுரைகள் அருமையானவை; அளவானவை; அனைவருக்கும் ஏற்றவை. சில உதாரணங்கள் பின்வருமாறு:

கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்<br>
நற்றாள் தொழாஅர் எனின்.

கற்க கசடறக் கற்பவை கற்றபின்<br>
நிற்க அதற்குத் தக.

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை<br>
பண்பும் பயனும் அது.

எடுத்த பொருளை நுணுகி ஆராய்ந்து அதனை முதலில் விளக்குதலும் பின்னர் அதனால் ஆகும் நன்மைகளைக் கூறுதலும் அதனையடுத்து அது இல்லாதவிடத்து ஏற்படும் தீமைகளை வலியுறுத்தலும் வள்ளுவர் பெருமான் இயல்பு. உதாரணமாக பண்புடைமை என்னும் அதிகாரத்தில்

அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்<br>
பண்புடைமை என்னும் வழக்கு

என்று முதலிலே பண்புடைமையை விளக்கி அதனை உடையராதற் காரணத்தைக் கூறுகின்றார். பின்னர்,

பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அதுஇன்றேல்<br>
மண்புக்கு மாய்வது மன்

என்று பண்புடைமையாலாகும் உயர்ச்சியை முன்வைக்கின்றார். இறுதியில்,

பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்<br>
கலந்தீமை யாற்றிரிந் தற்று

என்று அது இல்லாரது இழிவைக் கூறுகின்றார்.

இனி, எந்தவொரு கடினமான பொருளுக்கும் தெளிவான விளக்கம் கூறுவதில் வள்ளுவர் பெருமான் மிகவும் வல்லவர். அறிவு என்றால் என்ன? அறம் என்பதற்கு என்ன பொருள்? வாய்மை எனப்படுவது யாது? என்பனபோன்ற கேள்விகளுக்கு எல்லோர்க்கும் ஏற்ற விடைகள் தருகின்றார் அவர்:

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்<br>
மெய்ப் பொருள் காண்ப தறிவு

மனத்துக் கண் மாசிலனாதல் அனைத்தறன்

வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்<br>
தீமை இலாத சொலல்.

இவ்விதம் இனிதே வாழ்ந்து ஈடேற்றம் பெறுதற்கேற்ற இணையற்ற நீதிகளும், இன்றியமையாத போதனைகளும் திருக்குறளில் அடங்கியுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை யாவும் எல்லோர்க்கும் எப்பொழுதும் இன்றியமையாதவை என்று சொல்வதற்கில்லை. ஒரு சந்தையிலே பல்வேறு வகைப்பட்ட பொருட்கள் இருக்கும். அத்தனை பொருட்களையும் வருகின்ற ஒருவர் வாங்கிச் சென்றுவிடுவதில்லை. சந்தைக்கு வருகின்றவர்கள் அவரவர்க்கு அவ்வப்போது தேவையான பொருட்களை மட்டுமே பெற்றுச் செல்லுகின்றனர். அதுபோல திருக்குறட் கருத்துகளுள்ளும் எமக்குத் தேவையானவற்றைத் தெரிந்தெடுத்துப் பின்பற்றி நடப்போமாயின் வாழ்விலே சிறப்பு எம்மைத் தேடிவரக் காண்போம்.

திருக்குறளின் பெருமையுணர்ந்த பண்டைத் தமிழர்கள் அதனைப் பலவாறு போற்றியுள்ளனர். அனைத்தும் அறிந்த ஒளவைப் பிராட்டியார்:

அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்

என்று புகழ்ந்துள்ளார்கள்.

எல்லாப் பொருளும் இதன்பா லுளவிதன்பால்
இல்லாத வெப்பொருளு மில்லையால்

என்று மதுரைத் தமிழ் நாகனார் பாராட்டியிருக்கின்றார்.

இத்தகைய திருக்குறளை இன்று உலகம் முழுவதுமே போற்றிவருகின்றது. எண்பத்து மூன்று உலக மொழிகளில் இதுவரை திருக்குறள் மொழிபெயர்க்கப் பட்டிருக்கின்றது. அதன் பெருமை சொல்லவும் பெரிதே.

திருக்குறள் ஒரு வாழ்க்கை நூல்; எப்படியும் வாழலாம் என்ற போக்கை விடுத்து இப்படித்தான் வாழவேண்டும் என்று வலியுறுத்தும் நூல். உலகத்திலே அன்பு, பண்பு, அறம், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, ஒழுக்கம், ஒற்றுமை, ஒழுங்கு, உண்மை, ஊக்கம், உழைப்பு என்பனவற்றை வளர்த்து ஆக்கத்தையும், அமைதியையும் ஏற்படுத்தி இன்பத்தைப் பெருக்கி ஈடேற்றம் அளிக்கவல்ல தெய்வ நூல் திருக்குறளாகும். ஆதலால் இது எமது கண் போன்றது. எமக்குக் கதியாக இருப்பது. இதனை உச்சியில் வைத்துப் போற்றி உள்ளத்தால் ஒழுகினல் வையகத்திலே வாழ்வாங்கு வாழலாம்; வானுறையுந் தெய்வங்களாகலாம்.

— ஃ — ஃ —

# உங்களைப் பற்றி......

— நந்தி —

## 5

**தம்பி...**

அழகாக இருப்பது வாழும் முறை என்று எழுதினேன். அகத்தின் அழகுதான் முகத்தில் முழிப்பது; நாம் அழகாகவும் சிந்திக்க வேண்டும். நமது கல்வியில் கவனம், தொழிலில் ஆர்வம், சகோதரர் மேல் அன்பு, நண்பர் மேல் நேசம், ஏழைகள் மேல் பரிவு, தெய்வம் மேல் பக்தி... இப்படியான உணர்வுகளே நமது உள்ளத்தில் கோலம் கொள்ளவேண்டும். அன்பு, நேசம், பக்தி, பரிவு, மன்னிப்பு.. இந்தச் சொற்களை நினைத்தாலே அருமந்த சக்தி ஒன்று நமக்கு முருகு ஏற்றுகிறது.

உனக்கு அடுத்த முறை யார் மேலாவது கோபம் குமட்டும்போது, இந்தச் சொற்களை மனத்தால் தியானி. அப்போது உனது கோபம் மறையும்; இதயம் இதம் ஆகும். இப்படியான சொற்களை ஓர் அட்டையில் எழுதி உனது படுக்கை அறையில் தொங்கவிடு. அறம் செய்ய விரும்பு; ஆறுவது சினம் — இந்த ஒளவை வாக்கியங்கள் சில கோவில் சுவர்களிலே எழுதியிருப்பதை நான் கண்டிருக்கிறேன். சில கோவில்களில் வேறு நல்ல வாக்கியங்களையும் பார்த்து இருக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்திப்பது போலவே நமது பேச்சும் அழகாக இருக்கவேண்டும். தமிழ் என்றால் இனிமை என்று கூறிக்கொள்கிறோம். ஆனால், தமிழ் பேசப்படும் போது இனிமையாகவும் இல்லை; அழகாகவும் இல்லை; கம்பீரமாகவும் நாகரீகமாகவும் இல்லை. நான் நாடக, மேடைத் தமிழைப்பற்றிக் கூறவில்லை. சாதாரணமாக வீடு, பாடசாலை, தொழிலகம், தெரு சக பொதுநிலையங்களில் பேசப்படும் மொழியையே குறிப்பிடுகிறேன். படித்தவர்கள் கூட ஆங்கிலத்தில் பேசும்போது அழகாக அமைதியாக ஒயிலாக ஒழுங்காகப் பேசுகிறார்கள்; ஆனால் தமிழில் பேசும்போது கூலித் தமிழையும், கொச்சைத் தமிழையும் மதிப்பற்ற விதத்தில் பேசுகின்றார்கள்.

தம்பி... நாம் மற்றவர் கணிப்பில் உயர வேண்டுமானால் நமது அன்றாட மொழியின் தரம் சிறக்க வேண்டும். நாம் நாளும் பொழுதும் பேசும் தமிழில் அழகு, கம்பீரம், மதிப்பு, உபசரணை, நன்னடை தொனிக்க வேண்டும்.

**கு**ட் × மோனிங், **கு**ட் ஈவ்னிங், **கு**ட் நைட், ப்ளீஸ், தாங்க்ஸ், எக்ஸ்கியூஸ், பா(ர்)டன், சொரி போன்ற உபசரணை வார்த்தைகள் தினமும் சாதாரண ஆங்கில உரையாடல்களில் வழங்கப்படுகின்றன. சிங்கள மக்களின் வாழ்க்கையில்

---

× Good. தடிப்பாக **க** வரிசை எழுதி இருப்பின் Ga என உச்சரிக்கவும். அதேபோல தடிப்பாக எழுதின **ப** வரிசையை Ba என உச்சரிக்கவும்.



ஆயு**போ**வன், சமாவென்ட, கருணாகர முதலியன சர்வ சாதாரணம். தமிழர் தமிழில் பேசும்போது கூட, உபசரணைக்கு ஆங்கில வார்த்தைகளை உபயோகிக்கின்றனர். சிலர் அவ்வப்போது ஆங்கில வார்த்தைகளைக் காலை வந்தனம், மாலை வந்தனம் என்று மொழி பெயர்க்கிறார்கள். ஆனால், இது கேட்போருக்குப் பகிடியாகத் தொனிப்பதுண்டு.

வணக்கம், நன்றி, தயைசெய்து, மன்னிக்கவும் போன்ற சொற்கள் நமது வாழ்வோடு போதிய அளவு புணையவில்லை. இவை நமது பேச்சில் அதிகம் உபயோகப்பட வேண்டும். வணக்கம் என்ற சொல் அருமையான அர்த்தமும் வசீகர ஓசையும் கொண்டது. இந்தச் சொல்லை நாம் தமிழ் வாழ்வின் முதல் சொல்லாக்க வேண்டும்.

உபசரணை வார்த்தைகளில் மட்டுமல்ல, நமது உரையாடலின் எல்லா அம்சத்திலும் அன்பும், அழகும், நயமும், நவியமும் இருக்கவேண்டும்.

பின்வரும் சொற்களைப் பார்: அம்மா, ஆச்சி, அப்பு, அண்ணா, தம்பி, குஞ்சு, குஞ்சம்மா, இராசா, இராசாத்தி, கண்ணா, கண்மணி, அன்பரே, அன்புடையீர், வாருங்கோ, பெரியவர், வணக்கம்.... இனி, பின்வரும் சொற்களைப் பார்: மூதேவி, சனியன், பிரமகத்தி, பண்டி, கழுதை, குரங்கு, தாட்டன், கிழவி, பெட்டை, ஏய், வாடா, வாடி... முந்திய சொற்களைப் படிக்கும் போதுமனம் மகிழ்கிறது; பிந்திய சொற்கள் மன அருவருப்பைத் தருகின்றன. வெறும் சொற்களே அப்படி என்றால், அந்தச் சொற்களை ஒருவர் மேல் உபயோகிக்கும்போது எப்படி?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பி... அடுத்த தடவை புகையிரத நிலையத்தில் ''உம், பளைக்கு ஒரு டிக்கட்'' என்று கத்தாதே. ''பளைக்கு ஒரு டிக்கட் தாருங்கள்'' என்ருே, ''ஐயா பளைக்கு ஒரு டிக்கட்'' என்ருே, ''தயை செய்து பளைக்கு ஒரு டிக்கட் தாருங்கள்'' என்ருே கேள். இதுதான் முறை. மதிப்புக் கொடுத்து மதிப்பைப் பெற்றுக்கொள்; உதவி பெற்றுக் கொள். அன்பையும் பண்பையும் வளர்த்து, நமது சமூகத்தின் மதிப்பை உயர்த்துவது உனது கடமை ஆகும்.

**சுருக்கம்:**

நாம் அழகாகவும், அன்பாகவும், பண்பாகவும் பேச வேண்டும்.

# கவிதை அரங்கம்



## விழித்திடடா!

— நோ. இராசம்மா —

சோர்வினை விரட்டித் துயிலெழடா
சோம்பலை நீக்கி உரம் பெறடா
ஏரினைத் தூக்கி வளம் பெறடா; தமிழா
ஏமாந்தது போதும் விழித்திடடா!

இடுப்பை வளைத்து உழைத்திடடா!
இரும்புத் தோள்கள் படைத்திடடா
கலப்பை எடுத்து உழுதிடடா!
களனி பெருக்கி வாழ்ந்திடடா!

பண்டைய வீரம் படிக்கின்ருய்
பாம்பைக் கண்டு துடிக்கின்ருய்
அண்டைய நாட்டினைப் பாராயடா; தமிழா
அஞ்சுதல் விடடா; திரண்டெழடா!

உழைத்துப் பயனைப் பெறுவாயடா
உன்னத வாழ்வை அடைவாயடா
தழைக்கும் வாழ்வின் நிலைகண்டு
தரணி போற்ற வைப்பாயடா!

தமிழில் கலைகள் கற்றிடடா!
தமிழில் பற்று வைத்திடடா
அமிழ்தாம் தமிழர் வளம்பெறவே
அறம்பொருள் இன்பம் பெருகுமடா!

**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உ யி ர் நா டி

மூ. சடாட்சரன், கல்முனை - 3

திருக்குறள் எங்கள் உயிர்நாடி
தேசங்கள் எல்லாம் அதைப்பாடி
பெருமையுற்றது புகழ் தேடி
பெரியோ ரானவர் பலகோடி
பொய்யா மொழியாய் நிலைத்திருக்கும்
புலவர்கள் நாவில் இனித்திருக்கும்
வையம் தழைக்க உயிர்கொடுக்கும்
வாழ்க்கை சிறந்திடும் வழியுரைக்கும்!

அழகுக் கவிதைத் திறம்பாடும்
அறம்பொரு ளின்ப நெறிகூறும்
பழகப் பழகப் பயன்விளையும்
பசிநோய் துன்பம் பறந்தோடும்!
தன்மானத்தின் உயிர்த் துடிப்பு
தமிழர் வாழ்வின் படப்பிடிப்பு.
கன்னல் தமிழின் கலைவடிப்பு
கருணை வளர்க்கும் உயர்படைப்பு.

# கடவுள் வாழ்த்து

மதிவதனன், குரும்பசிட்டி.

தண்ணொளி முகத்தில் தேக்கி
தலைவியாய் ஆண்டு மிக்கப்
பொன்னொளி மேனி யோடே
பொலிவுடன் விளங்கும் நின்னை
அறிவிலா அற்பன் ஈண்டு
அன்புடன் வேண்டி நிற்பேன்
அன்னையே தாயே நீதான்
அன்புடன் அணைத்துக் கொள்வாய்.

இன் தமிழ் நூல்களோடே
இனியதின் பண்டம் சேர்த்துக்
கன்னியுன் விருப்புப் போலே
கவிதையால் தொடையல் சாற்றி
பண்ணுடன் அமைந்த பாடல்
பலதனை நின்கீழ் வைப்பேன்
எண்ணிய கரும மோங்க
ஏழையை அணைத்துக் கொள்வாய்.

# பிரார்த்தனை

— பொத்துவில் தீன் —

சிறக்கட்டும் வாழ்வு; மக்கள்
சிந்தனை ஒளி பெறட்டும்
பறக்கட்டும் வெகுளி, அன்பு
பரவட்டும் உலக மெல்லாம்
மறக்கட்டும் துன்பம் தன்னை
மனதிலே இன்பத் தேனைக்
கறக்கட்டும் இலட்சி யங்கள்
கவலைகள் இறந்திடட்டும்!!

மிளிரட்டும் அமைதி, வாழ்வு
மின்னட்டும் துணிவி னாலே!
ஒளிரட்டும் பண்பு; நெஞ்சில்
ஊறட்டும் இன்ப வெள்ளம்
துளிரட்டும் ஆக்க ஊக்கம்!!
துள்ளட்டும் இதய வீக்கம்
குளிரட்டும் பூமித் தாயும்
குருதிகள் காய்ந்தி டட்டும்!!

வறுமைகள் வற்றி டட்டும்
வல்லமை பெருகி டட்டும்
பொறுமையால் விளைவு ஓங்கிப்
பொலிவுமே பெற்றி டட்டும்!!
சிறுமைகள் நீங்க எங்கும்
சிறுதொழில் வளர்ந்தி டட்டும்!
குறுமதி சிதைந் திடட்டும்
குவலயம் ஒளி பெறட்டும்!!

நாடெல்லாம் சிறப்பை யூட்டும்
நம்பிக்கை ஓங்கி டட்டும்
காடெல்லாம் களனி யாக்கும்
கரங்களும் வலுப் பெறட்டும்!!
வீடெல்லாம் அறம் நிலைக்கும்
வீதிகளும் தேங்கி டட்டும்
பாடெல்லாம் பயன் தரட்டும்
பயமில்லா வாழ்வோங் கட்டும்!!

* *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கழனிக்குச் செல்வோமடா!

—ஃ— அன்புடீன் —ஃ—

கடலின் மீது கதிர்களை வீசி
கதிரவ னுதித்ததடா
படரு மொளியால் பாங்கான பங்கயம்
பாடி மலர்ந்ததடா!

பனியு மிருளும் பருதியைக் கண்டு
பாய்ந்து மறைந்ததடா
பாரே கழித்து பவ்வம் மகிழ்ந்து
பாடிச் சிரிக்குதடா!

காக்கை களொன்ருய் 'காகா' வென்றே
கதைகள் படிக்குதடா
கந்தன் கோவிலின் கவின்மணி ஓசை
காதை நிறைக்குதடா!

கறவைகள் நிரையாய் புற்றரை தேடி
களிப்புடன் செல்லுதடா
கானவ ரோடே உழவரும் கூடி
கழனிக்குச் செல்வோமடா!

## வண்ணுத்திப் பூச்சி

துந்துவை — மகீனு வகில்

வண்ண நிறங்கொண்ட வண்ணுத்திப் பூச்சியே - நீ
வர்ண நிறத்து மலரினைத் தாவியே
எண்ணெயாய் வடிகின்ற நறவை மாந்தி - பூங்கா
இறகை அடித்துப் பறப்பதும் கவினே! [வில்

புழுவினை ஒக்கும் உடலினை எடுத்தாய் - எனிலும்
புகழாத மக்களைப் புவியினில் காணேன்!
தழுவித் தந்தி நீ பறக்கையில் சிறுவர்
தன் கைக்குள் அமுக்கிடத் தாவியே வருவரே!

மலரின் திறந்தன்னை சிஞ்சித்தும் பாராது - நீ
மனதார நேசித்து மகிழ்வுறத் தழுவுவாய்
வளரும் குழந்தைகள் அழகினை மயங்கியே - உனை
வளைத்துப் பிடிப்பரே வண்ணுத்திப் பூச்சியே!




## உடல் நலம் பேணல்

செல்வி சுவாதா சலாகுதீன், வட்டதெனிய.

அறிவும் உடல் நலனும் இறைவன் மனித இனத்திற்கு அளித்த இரண்டு அருட்பெரும் பேறுகளாகும். நாம் எவ்வாறு படிப்பிற் கவனம் செலுத்துகிருேமோ அவ்வாறே உடல் நலத்திலும் அக்கறை காட்டுவது இன்றியமையாததாகும். இதைக்கொண்டே ஆங்கில இலக்கிய மேதை ஜான்ஸனும் "உடல்நலனைப் பெறுவது மதக்கடமை போன்றதாகும். ஏனெனில் உடல்நலன்தான் எல்லாச் சமூக பண்பாடுகளினதும் அடிப்படையாகும் என எடுத்துரைத்துள்ளார்."

அறிவையும் உடல்நலனையும் எடுத்துக்கொண்டால் அவைகளிரண்டும் எமது இரண்டு கண்கள் போன்றதாகும். அவற்றில் ஒன்றிற்கா மற்ருென்றை இழப்பது நிரந்தரமாக ஒற்றைக்கண் பொட்டையாக இருப்பதற்கு நிகராகுமேயன்றி வேறில்லை. ஒன்றை விட்டு ஒன்றைக் கவனிப்பது கண்களை விற்றுச் சித்திரம் வாங்குவது போன்றதாகவே முடியும். அதோடு நாம் வருங்காலத்தில் எப்படிப்பட்ட அறிவாளியாக விளங்கிய போதிலும் உடல் நலமின்றேல் கற்ற அறிவைத் தமக்கும் பிறர்க்கும் நல்லமுறையில் நல்கிப் பயன்படுத்த இயலாது போய்விடும். கிரேக்க மகாகவி ஹோமரிடம் மனிதனின் மிகப்பெரும் பேறு யாதுஎன வினவப்பட்டபோது "மனிதத் தன்மை நிரம்பிய உடலில் வன்மையான மூளை அமைந்திருப்பதேயாகும்" என்ருர். நோயற்ற உடல் ஆன்மாவின் விருந்து மண்டபமாகும். நோயுற்ற உடல் அதனுடைய சிறைக்கூடமாகும். ஆனல் இதைப் பெரும்பாலோர் உணர்வதில்லை.

அதிகமானேர் தாம் உடல் நலத்துடன் இருக்கும்போது அதனை எவ்வித பேணுதலுமின்றி இருந்துவிடுகிருர்கள். அவர்களின் உடல் நலன் கெட்டு அவர்கள் தங்கட்கு மட்டுமல்லாது மற்றவர்கட்கும் பாரமானபின்தான் உடல் நலத்தின் மதிப்பை உணர்கிருர்கள். நோயுற்றபின் தன்னுடல் நலத்தை உணர்ந்துதான் என்ன? உணராது இருந்துதான் என்ன?

ஒரு முட்டை எவ்வாறு நொருங்கி அதிலிருந்து மஞ்சள் கருவும் வெள்ளைக் கருவும் வெளிவந்துவிட்டால் அவற்றை உள்ளே திணித்து முன்புபோல் அம்முட்டையை ஆக்குவது இயலாத செயலோ அவ்வாறேதான் உடல் நலன் கெட்டுவிட்டால் அதனைத் திரும்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வும் சரிப்படுத்துவது இயலாத காரியமாகும். எனவே உடல் நலனைப் பேணுவதற்கு முதல்வழி ஓய்வு கொள்வதே. மாணவர்களாகிய எம்மிற் சிலரை எடுத்துக் கொண்டால் எந்தநேரமும் ஓயாது படித்துக் கொண்டிருப்பதே ஒளிய ஓய்வு கொள்ளும் பழக்கமே இல்லாதிருக்கிறார்கள். அறிவோடு கூடிய ஓய்வு ஒருவனுக்குத் தெம்பு நல்குவதாகும். எஃகினால் ஆக்கப்பட்ட இயந்திரங்களைக்கூட நீண்ட நேரம் தொடர்ச்சியாகச் செயலாற்றாது அவற்றுக்கும் ஓய்வு கொடுத்து சூடு மாறியபின் மீண்டும் செயல்படுத்துகிறார்கள். இப்படிப்பட்ட இயந்திரங்களைத்தான் இவ்வாறு பயன்படுத்துகிறார்களானால் எலும்பாலும், தசையாலும், இரத்தத்தாலும் உண்டுபண்ணப்பட்ட உடலாகிய இயந்திரத்தை நாம் எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதை நாமே சிந்தித்துக்கொள்ள முடிகிறது. எனவே ஒவ்வொரு நிமிட நேர வேலையின் பின்பும் ஓய்வு கொள்வது இன்றியமையாதாகும். ஓய்வும் உல்லாசப் பொழுதுபோக்கும் உடலுக்கும் உள்ளத்திற்கும் நன்மைபயப்பதற்கு இன்றியமையாதவை போல உடலுக்குப் பயிற்சியும் அதோடு தேவைப்படுகிறது.

முற்காலத்தில் உடற்பயிற்சிக்குப் பெரிதும் முக்கிய இடம் கொடுக்கப்பட்டுவந்தது. உடல் உரனில்லாதவன் வாழ்க்கையிலே பின்னுக்குத் தள்ளப்பட்டான். தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்ளவேண்டிய தவிர்க்கமுடியாத நிலையின் காரணமாக வேறு நாட்டவன் படையெடுத்து வரும்போது ஒவ்வொரு குடிமகனும் போரணியில் சேர்ந்து வீரப் போராற்ற வேண்டியிருந்தது. அதன் பயன்தான் அரசன்முதல் குடிமகன்வரை வாட்போர் விற்போர் முதலியவற்றில் சிறந்த பயிற்சிபெற்று விரிந்த மார்பும், திரண்ட புயமும் உள்ளவர்களாக விளங்கினார்கள். ஆனால் இன்றைய மக்களை எடுத்துக்கொண்டால் அவர்கள் அதிகம் படித்தவர்களாகி அறிவுக்கு முக்கியத்துவம் கொடுத்து உடல் நலனைக் கெடுத்துக் கொள்பவர்களாகவே இருக்கிறார்கள்.

இவ்வாறு ஒவ்வொரு நாழிகையிலும் புத்தகப்பூச்சியாகவே இருப்பதைத் தவிர்த்துவிடல் சாலச்சிறந்ததாகும். இளமையிலேயே உடல் நலம்பற்றிக் கவனம் செலுத்திப் பள்ளி முடிந்ததும் விளையாட்டு வெளியில் சென்று பாடங்கள்பற்றிய எண்ணங்களை மறந்து விளையாட வேண்டும். இவ்வாறு செய்தால் உடல் மட்டுமல்ல; உளமும் மூளையும் புதுத் தெம்பைப் பெறும். அவ்வாறு விளையாட்டில் விரும்பாதவர்கள் எம் கருத்தொத்த நண்பர்களிடம் சென்று கலந்து உரையாடிவருவது சிரமமின்றி நடந்து கொள்வதற்கு வழிகோலும். இவ்வாறு செய்வார்களேயாகில் எம் உடலானது நலம் பெற்று உளம் உரமுற்று அறிவுவன்மையும் பெற்று நீடூழிகாலம் வாழ்ந்து நெடும் பணியாற்ற முடியும் என்பதை ஐயமின்றிக் கூற ஆசைப்படுகிறேன்.

# நான் விரும்பும் தொழில் ஆசிரியத் தொழில்
## ஆசிரியரின் கடமைகள்

சி. பஞ்சலிங்கம் — குப்பிளான்

உலகிலேயுள்ள தொழில்களிலே புனிதமானதும் சேவையுணர்ச்சியை வளர்ப்பதும் நல்லதொரு சமுதாயத்தைச் சிருஷ்டிக்கக் கூடியதுமான தொழில் ஆசிரியத் தொழிலேயாகும். சாதாரண இயந்திரவாழ்வாக இருக்காது பலரின் உள்ளங்களை ஆட்சி செய்யும் அரசனாகக் கொலுவிருந்து, தலைவனாக வழிநடத்தி, அன்னையாக அரவணைத்து நெறிப்படுத்தும் நல்ல நூலாகத் திகழ்பவனே ஆசிரியன். ஆசிரியன் ஆண்டவனுக்குச் சமனாவான்; இனபேதம் - வர்க்க பேதம் - சாதி பேதம் ஆகியவற்றுக்கு அப்பாற்பட்டு அனைத்துலக மக்களுக்கும் தன் அருட்பார்வையால் அனுக்கிரகம் செய்யும் ஆண்டவன்போல் ஆசிரியனும் இருக்கவேண்டும். ஒவ்வொரு ஆசிரியனுக்கும் கடமையிற்பற்று இருக்கவேண்டும். தன்னிடம் இருக்கும் பொறுப்பை உணர வேண்டும். உணர்ந்து செயற்பட வேண்டும்; கூலிக்கு மாரடிப்பதுபோல் தொழிலைச் செய்தல்கூடாது.

ஏழ்மையின் மடியில் தவிக்கும் பல பெற்றோர்கூடத் தமது வறுமையைத் தமக்குள் அடக்கிக்கொண்டு தாம் பெற்ற செல்வங்கள் கல்வி அறிவைப் பெறவேண்டும் என்ற ஒரே பெருநோக்குடன் கல்விக்கூடங்களுக்குப் பிள்ளைகளை அனுப்புகின்றனர். பல மைல்களுக்கப்பால் இருந்தும், பணத்தைச் செலவழித்தும் கல்லூரிகளுக்குப் பிள்ளைகள் வருகின்றனர். ஒவ்வொரு குடும்பத்திலும் உழைக்கும் தொழிலாளி தனது வருமானத்தில் பெரும்பகுதியைத் தன் பிள்ளைகளின் கல்விக்காகச் செலவிடுகிறான். எப்பொழுது தன்பிள்ளை வளர்வான்; அறிவுள்ளவனாகத் திகழ்வான்; உலகத்தாரால்போற்றி மதிக்கப்படும் பண்பாளனாக மாறுவான்; தான் பெற்ற கல்வியின் உதவியால் ஒரு தொழிலை ஏற்றுத் தம் துயரைத் துடைப்பான் என்ற இத்தகைய பெற்றோர்களின் கனவை நனவாக்க வேண்டியவர்கள் யார்? அவர்கள் ஆசிரியர்களே!

ஆசிரியர் வகுப்பில் அன்பாகப் பழகவேண்டும். அன்பால் அதிகாரத்தைப் பெறலாமே தவிர அதிகாரத்தால் அன்பைப் பெற முடியாது அன்பு என்னும் ஆயுதத்தின் உதவியுடன் கல்வி என்னும் அருளைப் பிள்ளைகளின் உள்ளத்தில் பதியச் செய்யவேண்டும். எல்லாப் பிள்ளைகளாலும் எல்லாவற்றையும் உடனடியாக விளங்கிக் கொள்ள முடியாது. விளங்காததை இரண்டு, மூன்று முறை திருப்பி விளங்கப்படுத்தும் பொறுமை ஆசிரியனிடமே உண்டு. தனது பிள்ளைகள் உடன் பிறந்த சகோதரர்கள்போல தன்னிடம் கல்வி கற்கும் யாவரையும் எண்ணல் வேண்டும். பிள்ளைகள் விடும் தவறுகளை அவர்களாகவே உணரச்செய்ய வைத்தல் வேண்டும். நல்ல போதனைகள் நல்ல சிந்தனைகள் மூலம் மாணவர் சமுதாயத்தை நல் பாதையில் வழி நடாத்திச் செல்பவனே ஆசிரியனாவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியன் நல்ல முறையில் வாழ்ந்து காட்ட வேண்டும். உபதேசம் செய்யும் ஒவ்வொரு வார்த்தைக்கும் இலக்கணமாக வாழப் பழகவேண்டும். தலைவனே தவறு விடுபவனுக மாறக்கூடாது. பொது வாழ்வில் மிகவும் நேர்மையாகவும் வாழப் பழகவேண்டும். நமது அரசாங்கம் பல பொருளாதாரக் கஷ்டங்களுக்கு மத்தியிலும் தொடர்ந்து தமது பிள்ளைகளுக்கு இலவசக் கல்வியை அளித்துவருகின்றது.

இலங்கையின் வருமானத்தின் கூடிய பகுதி கல்விக்கே செலவிடப்படுகிறது. நமது தேசியச் செல்வமே இன்றைய மாணவர்கள் என்பதை நமது ஆட்சியாளர்கள் நன்ருக உணர்ந்திருக்கின்றனர்.

உண்மை உணர்ச்சியுடன் தொண்டு செய்யும் ஆசிரியனை — கடமை உணர்வுடன் செயல்படும் பண்பாளனை — அவரின் சேவை உணர்ச்சியை நமது அரசாங்கமும் மதிக்க வேண்டும். கடமை செய்பவனுக்குத்தான் பதவி உயர்வு. அரச மதிப்பு என்ற நிலை ஏற்பட வேண்டும்.

## நூல் நிலையம்

சேகரன், — கோப்பாய்.

நூல் நிலையம் இருப்பதன் நோக்கமென்ன?

அங்கு பல பொதுமக்கள வந்து அங்கு இருக்கும் புத்தகங்களை வாசிக்கத்தக்கதாக இருத்தல் வேண்டும் என்பதுதான்.

அங்கு மாணவர்களுக்கு அறிவுக்குகந்த நூல்கள் பல இருப்பதால் அவர்களுக்கு அது மிக உதவியாக இருக்கும்.

மாணவர்கள் நூல்களை வீட்டில் வாசிப்பதற்கு எடுத்துச் செல்லத்தக்கதாகவும் இருகக வேண்டும்.

நூல் நிலையத்தில் அமைதியாகவும், ஒழுங்காகவும், குப்பை கூழங்களைப் போடாமலும் இருத்தல் வேண்டும்.

அங்கே இருந்து வாசிப்பவர்களுக்கு எவ்வித இடையூறும் செய்யாமல் அமைதியாகவும் ஒழுங்காகவும் நடந்துகொள்ள வேண்டும். அப்படி நாங்கள் நடந்துகொண்டால் நம்மைப்பற்றி நல்ல அபிப்பிராயம் கொள்வார்களல்லவா?

நூல் நிலையப் புத்தகங்களை நாம் கவனமாகவும் அழுக்குப் படியாமலும் வைத்திருத்தல் வேண்டும். அந்தப் பொதுநூல்களை தமது சொந்த நூல்களாகக் கருதி நம் அபிப்பிராயங்களை எழுதுவதோ பக்கங்களைக் கிழிப்பதோ நல்லதல்ல. இதனுல் நூல்கள் விரைவில் பழுதடைந்து விடுகின்றன அதனுல் நமக்குப் பின்னர் வாசித்துப் பலனடைய வேண்டியவர்களுக்கு இவை சிதைந்த நிலையிலேயே போய்ச் சேருகின்றன. அதனுல் அவர்களுக்கு அதுபெரும் இழப்பல்லவா? எனவே, இவ்விதம் நேரா வண்ணம் கவனமாக நடந்துகொள்ளவேண்டும். நூல் நிலையங்களைப் பொறுப்புடன் பயன்படுத்தி நாம் எமது அறிவை விருத்தி செய்துகொள்ள வேண்டும்.



# பொது அறிவுப் போட்டி இல. 4.

பின்வரும் இரண்டு பிரச்சினைகளுக்கும் சில தீர்ப்புக்கள் தரப்பட்டுள்ளன. சரியான தீர்ப்புக்களைக் கொண்ட இலக்கங்களை எழுதி அனுப்பிப் பரிசில்களைப் பெறுங்கள்.

சரியான விடைகளை அனுப்பும் இருவருக்கு
ரூபா பத்து (10|-) பெறுமதியான அறிவு நூல்களை
**பலப்பிட்டி - அரூஸ் வழங்குவார்.**

## முதலாவது பிரச்சினை

கடந்த 1958-2-29-ல் ஒரு பெண்ணைச் சித்திரவதை செய்ததாகக் குற்றம் சாட்டி ஒரு வாலிபன் மீது தொடரப்பட்ட வழக்கின் தீர்ப்பு எதுவாக இருக்கலாம்?

1. பெண்ணை எச்சரித்து, வழக்கை நீதிபதி தள்ளுபடி செய்திருப்பார்.
2. மேல் விசாரணைக்காக வழக்கை ஒத்திவைத்திருக்கலாம்.
3. வாலிபன் சிறை சென்றிருப்பான்.
4. குற்றவாளிக்கு மரணதண்டனை கிடைத்திருக்கும்.
5. வாலிபன் பைத்தியக்காரனென்று முடிவாகி இருக்கும்.

## இரண்டாவது பிரச்சினை

பிரதான வீதியில் சென்ற மாணவனின் பின்புறமாக வந்த பஸ் வண்டி அம் மாணவனை மோதிவிட்டுச் சென்றது. காரணம் எதுவாக இருக்கலாம்?

1. மாணவன் புத்தகமொன்றை வாசித்தபடி சென்றிருப்பான்.
2. மாணவன் பாதையில் விளையாடிக் கொண்டு நின்றிருப்பான்.
3. பஸ் வண்டி வேகமாக வந்திருக்கலாம்.
4. பஸ் வண்டிச் சாரதி மதுபோதையில் இருந்திருப்பான்.
5. மாணவன் தனது இடப்பக்கத்தால் சென்றிருப்பான்.

### எங்கள் தீர்ப்பு

முதலாவது பிரச்சினையின் தீர்ப்பு இல.....................

இரண்டாவது பிரச்சினையின் காரண இல.................

பெயர்.......................................................................

பாடசாலை ..................................................................

.................... ....................................

.................... ....................................

வகுப்பு கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்குத் தெரியுமா?

—஁— சி. அரியநாதன் —஁—

## 1. டயனு குரங்கு:-

இது ஆபிரிக்காவின் மேற்குப் பாகத்திலுள்ளது. இது கறுப்பு மயிரையும், வெண் தாடியையுங் கொண்டது. இது கூட்டமாக இருப்பதில்லை. கிட்டத்தட்ட பதினெட்டு அங்குலமானது.

## 2. டார் மனஸ்:-

இதுவும் ஆபிரிக்காவைச் சேர்ந்ததே, இது அணில் போன்றது. மயிரடர்ந்தது. கண், காது சிறியவை. இரவில் இரை தேடும். பறவைகளின் முட்டைகளைத் திருடிக் குடிக்கும்.

## 3. டார்சியா:-

இது பூனை போன்றது. சுமத்ரா, போர்ணியோ முதலியவற்றில் வாழ்வது. முகம் குறுகிய வட்டம். தவளைபோல் குதித்துச் செல்லும். இது பூச்சி, புழு முதலியவற்றை உண்கிறது.

## 4. டிங்கோ:-

அவுத்திரேலிய காட்டு நாய். ஓநாயில் சற்றுச் சிறிது. கால்கள் நீண்டது. வால் மயிரடர்ந்தது.

## 5. டிடல்பிஸ்ட்ரைஸ்டிரியாடா

இது அமெரிக்க மிருகம். ஐம்பது இனங்களுண்டு. எலி, பூனை, நாய், குரங்கு போன்ற உருக்கொண்டவை. சிலவற்றிற்கு வயிற்றில் பையுண்டு.

## 6. வர்ச்சீனியன் ஒப் பேரஸம்:-

இது டிடல்பிஸ்ட்ரைஸ்டிரியாடாவில் ஒரு வகை. இது நாய் போன்றது. மரமேறிப் பறவைகளைப் பிடிக்கிறது. மரப்பொந்துகளில் வசிக்கும்.

## 7. மர நாய் (Tree Dogs)

இது ஆபிரிக்காவிலுள்ளது. நரி போன்றது. இது மரத்தில் வசிக்கும். மரப்பட்டைகளிலுள்ள புழுக்களை உண்ணும்.

✶✶

# பங்குடைமை அறிமுகம் (9)

வை, சி. சிவஞானம்

உதாரண விளக்கம் 12

நன்மதிப்புக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| வியாபார நிலையக் கொள்முதல் | 3000 | மணி மூலதன க/கு | 1500 |
| | | முத்து ,, ,, | 1000 |
| | | சிவம் ,, ,, | 500 |
| | 3000 | | 3000 |

மூலதனக் கணக்கு

| | மணி | முத்து | சிவம் | | மணி | முத்து | சிவம் |
|---|---|---|---|---|---|---|---|
| நன்மதிப் பால் | 1500 | 1000 | 500 | காசு | 32000 | 22000 | 11000 |
| மீதி | 30500 | 21000 | 10500 | | | | |
| | 32000 | 22000 | 11000 | | 32000 | 22000 | 11000 |

மணி, முத்து, சிவம் என்போரின் புதிய ஐந்தொகை

| கடன்கள் | | | சொத்துக்கள் | |
|---|---|---|---|---|
| மூலதனம் | | | | |
| மணி | 30500 | | நிலையான சொத்துக்கள் | 45000 |
| முத்து | 21000 | | சரக்கு மீதி | 9500 |
| சிவம் | 10500 | | கடன்பட்டோர் | 3200 |
| | | 62000 | காசும் வங்கியும் | 6800 |
| கடன் கொடுந்தோர் | | 2500 | | |
| | | 64500 | | 64500 |

## 5. புதிய பங்காளனைச் சேர்த்தல் (உட் புகுதல்)

நடைபெறுந் தொழில் ஒன்றில் புதிதாக ஒருவனைப் பங்காளனகச் சேர்க்கப் பெரும்பாலும் பழைய பங்காளர்கள் விரும்பமாட்டார்கள். தாம் பெறும் வருமானத்தில் பிறருக்குப் பங்குகொடுக்க இயல்பாகவே எவரும் விரும்பமாட்டார்கள். ஆனல், தமக்கும் தொழிலுக்கும் நன்மை கிடைக்குமெனக் கருதின் புதிய பங்காளனைச் சேர்த்துக்கொள்வர், தொழில் நிலையத்தை விரிவாக்க வேண்டிய மூலதனத்தைப் பெறுவதற்காக அல்லது செல்வாக்கு நிருவாகத் திறன்படைத்த பங்காளனைப் பெறுவதற்காக அல்லது வேறு காரணங்களுக்காகப் புதிய ஒருவரைப் பங்காளனகச் சேர்த்துக்கொள்ளலாம். புதிய பங்காளனைச் சேர்க்கும்போது முக்கியமாக மூன்று பிரச்சினைகள் ஏற்படக் கூடும். அவையாவன:

1. புதிய பங்காளன் கொண்டுவரவேண்டிய மூலதனத் தொகை
2. நன்மதிப்பு
3. சொத்துக்களை விலைமதித்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய பங்காளன் கொண்டுவரும் மூலதனத் தொகை

புதிய பங்காளன் ஒருவனைச் சேர்ப்பதன் முக்கிய நோக்கங்களில் ஒன்று தொழிலை விரிவுபடுத்துவதற்கு வேண்டிய பணத்தை மூலதனமாகப் புதிய பங்காளனிடம் பெறுவதேயாகும். அவன் கொண்டுவரும் மூலதனத் தொகையையும் கருத்திற்கொண்டே அவனுக்குரிய இலாப நட்ட வீதத்தையும் பழைய பங்காளர் தீர்மானிப்பர். புதிய பங்காளன் கொண்டுவரும் மூலதனத்தொகை கணக்கேடுகளில் பின்வருமாறு பதிவு செய்யப்படும்.

காசு (வங்கி) க் கணக்கு Dr.( )
புதிய பங்காளன் மூலதனக் கணக்கு Cr.( )

## நன்மதிப்புத் தொகை

பழைய பங்காளர் தொழில் ஆரம்பித்து வருமானம் பெறக் கூடிய நிலைக்குக் கொண்டுவந்த பின்னர் புதிய பங்காளர் சேர்ந்து சுலபமாக வருமானம் பெறமுடிகிறது. அத்துடன் புதிய பங்காளனுக்கு பழைய பங்காளரீட்டிய சொத்துக்களிலும், வியாபார நிலையத்தின் செல்வாக்கு - புகழ் என்பவற்றிலும் இவற்றினால் ஏற்படக் கூடிய வருமானத்திலும் உரிமையுண்டு. பழைய பங்காளரின் இழப்புப் புதிய பங்காளனுக்கு வருமானமாகிறது. பழைய பங்காளரின் இழப்பை ஈடு செய்வதற்காகப் புதிய பங்காளன் செலுத்துந் தொகையை நன்மதிப்புக் கட்டணம் என்று கூறுவர்.

### நன்மதிப்பைப் பதியும் முறைகள்

1. பணமாகக் கொண்டுவரல்

I பழைய பங்காளருக்குப் பணமாகக் கொடுத்தல்.

II பழைய பங்காளரின் மூலதனத்துடன் சேர்த்தல்.

III பழைய பங்காளருடன் மூலதனத்துடன் சேர்த்துப் பின் பழைய பங்காளர் பணமாக எடுத்தல்.

2. கணக்கேடுகளில் பதிதல்

1. நன்மதிப்புக்கணக்கை ஆரம்பித்து பழைய பங்காளர் மூலதனத்துடன் சேர்த்தல்.
2. நன்மதிப்புத் தொகையை எல்லாப் பங்காளரும் இலாப நட்ட வீதப்படி மூலதனத்திலிருந்து ஈடு செய்தல்.
3. நன்மதிப்புத் தொகையை புதிய பங்காளன் தனது வருமானத்திலிருந்து வருடா வருடம் ஈடுசெய்தல்.



## நன்மதிப்புத் தொகையைப் புதிய பங்காளன் பணமாகக் கொண்டுவரல்

தொழில் நிலையத்தின் நன்மதிப்புத் தொகையைத் தீர்மானித்து அத் தொகையைப் புதிய பங்காளன் பணத்தைக்கொண்டு கொள்முதல் செய்தல் வேண்டும். அப் பணத்தைப் பங்காளர் மூன்று வகையில் பயன்படுத்தலாம்.

1. புதிய பங்காளனிடமிருந்து நன்மதிப்புத் தொகையைப் பழைய பங்காளர் பணமாகப் பெற்றுக் கொள்ளல்.

புதிய பங்காளனிடமிருந்து நேரடியாகப் பழைய பங்காளர் நன்மதிப்புத் தொகையைப் பணமாகப் பெற்றுக்கொண்டால் தொழில் நிலையத்தின் கணக்கேடுகளில் எவ்வித பதிவுஞ் செய்யத் தேவையில்லை. இலாப நட்ட வீதத்தைப் புதிய பங்காளனுக்குக் கொடுத்த பகுதியைத் தவிர்த்து மீதிப் பகுதியில் தமது வீதப்படி பிரித்துக்கொள்ளல் வேண்டும்.

### உதாரணக் கணக்கு

இலாப நட்டத்தை முறையே 3 : 2 என்ற வீதப்படி பங்கிடும் பரம், சிவம் என்னும பங்காளர்களின் 1-4-72-ம் திகதி ஐந்தொகை பின்வருமாறிருந்தது.

| கடன்கள் | | | சொத்துக்கள் | |
|---|---|---|---|---|
| மூலதனம் | | | நிலம் கட்டிடம் | 75000 |
| பரம் | 60000 | | சரக்கு | 25000 |
| சிவம் | 40000 | | கடன்பட்டோர் | 8000 |
| | | 100000 | காசும் வங்கியும் | 12000 |
| கடன் கொடுத்தோர் | | 20000 | | |
| | | 120000 | | 120000 |

1-4-72-ம் திகதி மணி என்பவனைப் பின்வரும் நிபந்தனையுடன் புதிய பங்காளனைச் சேர்த்தனர்.

I மணி மூலதனமாக 35000 ரூபா கொண்டுவரல்வேண்டும்.

II நன்மதிப்புத் தொகையாக மணி 5030 ரூபா கொண்டுவரல் வேண்டும். நன்மதிப்புத் தொகையை பழைய பங்காளர் இலாப நட்டத்தைப் பகிரும் வீதப்படி புதிய பங்காளனிடம் பெறவேண்டும்.

III இலாப நட்டத்தில் மணிக்கு $\frac{1}{4}$ பங்குபெற உரிமையளித்தல் வேண்டும்.

புதிய பங்காளனைச் சேர்ப்பதற்குரிய நாட்குறிப்புக்களையும் புதிய ஐந்தொகையையும், புதிய இலாப நட்ட வீதத்தையும் தருக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரண விளக்கம் 13

நாட் குறிப்பு

காசு ( வங்கி )க் கணக்கு Dr.( ) 35000
மணி மூலதனக் கணக்கு Cr.( ) 35000

நன்மதிப்புத் தொகையைப் பழைய பங்காளர் பணமாகப் பெறுவதால் கணக்கேடுகளில் பதியத் தேவையில்லை.

பரம், சிவம், மணி என்போரின் 1-4-72-ம் திகதியன்றுள்ள

ஐந்தொகை

| கடன்கள் | | | சொத்துக்கள் | |
|---|---|---|---|---|
| மூலதனம் | | | | |
| பரம் | 60000 | | நிலம் கட்டிடம் | 75000 |
| சிவம் | 40000 | | சரக்கு | 25000 |
| மணி | 35000 | | கடன்பட்டோர் | 8000 |
| | | 135000 | காசும் வங்கியும் | 47000 |
| கடன் கொடுத்தோர் | | 20000 | | |
| | | 155000 | | 155000 |

புதிய இலாப நட்ட வீதம்

மணி இலாப நட்டப் பங்கு = 1/4
மீதி = 3/4
பரம் பங்கு = 3/4 × 3/5 = 9/20
சிவம் = 3/4 × 2/5 = 6/20

பரம், சிவம், மணி என்போரின் இலாப நட்ட விகிதம் முறையே 9 : 6 : 5 ஆகும்.

2. புதிய பங்காளர் கொண்டுவரும் நன்மதிப்புத் தொகையைப் பழைய பங்காளர் இலாப நட்டத்தைப் பகிரும் வீதத்தில் தமது மூலதனத்துடன் சேர்த்தல்.

புதிய பங்காளன் கொண்டுவரும் நன்மதிப்புத் தொகையைத் தொழிலில் பயன்படுத்த விரும்பினுல் அத் தொகையை இலாப நட்டத்தைப் பகிரும் வீதப்படி பிரித்து பழைய பங்காளர்கள் தமது மூலதனத்துடன் சேர்த்துக் கொள்ளல் வேண்டும். இதனுல் பழைய பங்காளர் மூலதன வட்டியாகப் பெறுந் தொகை அதிகரிக்கும். அதிக மூலதனம் இருப்பதால் வியாபார நிலையத்தின் வருமானமும் அதிகரிக்கும்.

உதாரணக் கணக்கு

மேற் தரப்பட்ட உதாரணக் கணக்கில் நன்மதிப்புத் தொகையைப் பழைய பங்காளர் இலாப நட்டத்தைப் பிரிக்கும் வீதப்படி பிரித்துத் தமது மூலதனத்துடன் சேர்த்துக் கொண்டனர் என்னும் நிபந்தனைக் கமையச் செய்க.

— தொடரும்

# ஒரே ஒரு தெய்வம்

குரும்பசிட்டி, கே. எஸ். சிவகுமாரன்

எப்பொழுதும் வெளியாட்களைப் பற்றிய கருத்தரங்கங்கள்தான் நடப்பது வழக்கம். ஆனுல். இன்று அவருக்கு ஒரு தலையங்கமும் கிடைக்கவில்லைப்போலும். அதனுலே ஏதோ மீனுவையும் சித்தப்பாவையும் வைத்துக் கதை அளக்கத் தொடங்கிவிட்டார்.

''டேய் பாஸ்கர்! எங்கிருந்தோ உன்னைக் கண் தெரியாத பாவியாச்சே என் பிள்ளைகளுக்கும் உதவியாயிருக்கும் என்று என் மனைவி கூறியதால் இங்கு உன்னை வைத்திருக்க நீ என்னடாவென்ருல் பிள்ளைகளோடு சித்தப்பா முறை கொண்:_ாடுகிருய். எந்த வழியிலடா சித்தப்பா நீ? என்னடா உனக்கும் மீனுவுக்கும் கதை? ''

இவ்வளவும் மீனுவின் கணவனின் வாய்க்குள்ளால் வந்த வார்த்தைகள் ஆகும்.

மேற்கூறியவை யெல்லாம் சித்தப்பாவாகிய பாஸ்கருக்குச் சர்வ சாதாரணமாகவே தெரிந்தது. ஆனுல், மீனுவைக் குறை கூறுவதுதான் அவன் நெஞ்சுக்கு ஏதோ ஒரு வலியைக் கொடுத்தது. அப்படி இனம் புரியாத ஒரு அன்பு அந்த மீனுமீது அவனுக்கு.

''எதையும் தாங்கும் இதயம் வேண்டும் என்பாயே மீனு, இதையும் தாங்க எனக்கேது மீனு இதயம்?'' என அவன் இதயம் அவனையே கேட்டுக்கொண்டது.

இதயம் வெடிப்பதற்கு முன் இருந்த இடத்தைவிட்டு எழுந்து மெல்ல மெல்ல நடந்து அவன் அறைக்குச் செல்கின்ருன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஐயா! நீங்கள் என்னை எது வேண்டும் என்றாலும் சொல்லுங்கள். அதை நீங்கள் சோறு போடுறதற்காகத் தாங்கிக்கொண்டு அடிக்க அடிக்க நாய்போல உங்களைச் சுற்றிக்கொண்டே இருப்பேன். ஆனால் மீனாவை...''என்று இழுத்தான் பாஸ்கர்.

''அடே! எனக்கில்லாத அன்பு பாசம், ஏனடா உனக்கு மீனாவிலே?''

''என்னுடைய கண்களைக்கூட இறைவன் இடையிலே பறிச்சிட்டான். ஏன் ஐயா உங்களுக்கு அன்பையும் பாசத்தையும் பிறப்பிலேயே பறிச்சிட்டான்? எனக்கும் இப்பதான் ஐயா புரியுது 'அன்புக்கும் ஓர் அளவு வேண்டும் என்பது'. ஐயா உங்க பிள்ளைகளுக்கு எத்தனையோ தடவை சொல்லியிருக்கின்றேன் என்னைச் சித்தப்பா என்று அழைக்க வேண்டாமென்று. அதற்கு அவர்கள் சொன்ன பதில் என்ன தெரியுமா?''

''முத்து இருக்கே அது தனியாக இருப்பதிலும்பார்க்க ஒரு தங்கத்திலே பதித்தால்தான் அதன் ஒளியும் அழகும் கூடவாக இருக்கும். இதிலே முத்துத்தான் சித்தப்பா அன்பு. தங்கம்தான் சொந்தம். அப்ப சொந்தத்துக்குள் அன்பைச் சேர்த்தால்தான் அதில் ஒரு தனிப் பாசத்தைக் காணமுடியும். அதனால்தான் சித்தப்பா உங்களை இந்தச் சின்ன இதயங்களுக்குச் சொந்தமாக்கி அன்பையும் அதோடு சேர்த்துச் சித்தப்பா என்று அழைக்கின்றோம். இது தப்பா?'' என்று என்னையே திருப்பிக் கேட்கிறார்கள் உங்கள் செல்வங்கள்.

''உங்களிடத்து இல்லாத அன்பு பாசம் என்னென்று ஐயா உங்கள் செல்வங்களிடத்தில் வந்தது?''

''என்னடா இன்றைக்கு என்னிலும் பார்க்க கூடக் கத்திறே?''

'' கத்தவேண்டிய நேரம் வந்...''



சொல்லி முடிப்பதற்குள் பாஸ்கரின் கன்னத்தை அவர் கை பதம்பார்த்தது. பாஸ்கர் அப்படியே நிலத்தில் விழும்வேளை ஓடிவந்து பிடித்துக்கொண்டாள் மீனா.

''அடியே! நீ என் மனைவி என்பதைமட்டும் மறந்து விடாதே'' என்றான் அவள் கணவன்.

மீனாவின் வாய் மௌனம்தான் பெண்மைக்கு அழகு என்பதை உறுதிப்படுத்தியது. குழந்தையுள்ளம் படைத்த பாஸ்கர் இரு முறை குழந்தைபோல் எழும்ப முடியாமல் நிலத்தில் விழ மீனா கைகளைக் கொடுத்துத் தூக்கிவிடுகின்றாள். மீனாவின் கணவனின் வாயில் வழமையான ஒரு சிரிப்புத் தவழ்ந்தது.

''ஒரு எதிரியின் வீட்டில் தஞ்சம் புகலாம். ஆனால் ஒரு சந்தேகம் பிடித்தவன் வீட்டில் ஒருகணமும் நிற்கக் கூடாது. புற்று நோய் இருக்கே அதற்கு ஆரம்பத்திலேயே தெரிஞ்சா ஒருவாறு நீக்கச் சிகிச்சையுண்டு. ஆனால் இந்தச் சந்தேகம் என்ற நோய் இருக்கே இதற்கு எந்த உலகத்திலுமேயே சிகிச்சை கிடையாது. அப்படிக் கிடைத்தாலும் தியாகத்தின் உருவிலேதான் அதைப் பெறமுடியும்.''

''என்னடா, உன்னை இங்கே இழுத்துப் பிடிச்சிருக்கிற மாதிரிக் கதைக்கிறியே. போடா போற இடத்திற்குப் போடா''.

''நான் அதற்காகத்தானே காத்திருக்கின்றேன்.''

மீனா குறுக்கிட்டு ''நீங்கள் பேசாமல் போய்ப் படுங்கோ சித்தப்பா!'' என்றாள்.

பாஸ்கருக்கு எங்கே தெரியப் போகின்றது அவள் கண்ணில் வழியும் கண்ணீர். பாஸ்கரும் அன்புச் சொல்லுக்கு அடிமையாகிப் படுக்கைக்குச் செல்கின்றான். ஆனால் நித்திரைக்கு அடிமையாக அவனால் முடியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3

மீனா தன் கணவனை ஒருவாறு படுக்கையில் அமர்த்துகின்றாள். பின்னர் மின்விளக்குகள் அணைக்கப்படுகின்றன. இருளும் அவர்களை அணைத்துக்கொள்கின்றது. மீனாவின் கணவன் மெல்ல எழும்புகின்றான். அடிமேல் அடிவைத்து முன் ஹோலுக்குச் செல்கின்றான். அங்கு உள்ள நீண்ட யன்னல் கதவுகளைத் தன் மதுக்கரங்களினால் மெல்லத் திறக்கின்றான். வட்ட நிலவு வானத்தில் இருந்து ஆட்சி செய்துகொண்டிருந்தது.

அதன் ஒளி யன்னல் கதவில் உள்ள கிறிலின் நெளிவு சுழிவுகளை அப்படியே தரையில் படம் பிடித்துக் காட்டிக் கொண்டிருந்தது. ஏனோ அந்த ஒளிக்கு அவன் மனதில் உள்ள நெளிவு சுழிவுகளை எடுத்துக்காட்ட முடியாமல் போய்விட்டது. அப்படி இருந்தும் அவனுக்குப் பின்னால் இருண்ட அவன் உள்ளத்தைப் பிரதிபலிப்பதுபோல் ஒரு இருண்ட விம்பம் விழுந்துகொண்டிருந்தது.

தென்னஞ் சோலை; அதனருகில் தேனருவி; அதன் ஓரங்கள் எல்லாம் அல்லி மலர்க் கூட்டம். அவை யாவற்றையும் கண்டோ அந்த நிலவு ஓடாமல் அப்படியே நின்று கொண்டிருந்தது. வானத்தைப் பார்த்த அவன் கண்கள் சற்றுக் கீழே இறங்கியது. பச்சைப் பசேல் என்று கிடக்கும் தரையிலும் ஓர் நிலவு. ஒரே நேரத்தில் என்னென்று பூமியில் இரு நிலவுகள் தோன்ற முடியும் என்று அதிசயிப்பதற்குள் இன்னும் ஓர் அதிசயம் காத்திருந்தது. ஆமாம் அது என் மீனாவேதான். நீலாடை உடுத்த அவள் மேனியில் மேலாடை காற்றிலாட அந்த நீலமேகத்தில் அவள் நிலா நில்லாமல் அசைந்து கொண்டிருந்தது. நிலாவின் அருகே உருண்ட பாறை மீது உட்கார்ந்துகொண்டு உள்மாரக் கதைத்துக்கொண்டு இருக்கின்றான் பாஸ்கர். இவை யாவற்றையும் யன்னலால் பார்த்துக் கொண்டு இருந்த அவன் கண்கள் பனித்தன. என்றாலும் அதிலும்



அவன் ஒரு அழகை இரசித்தான். சற்று நேரத்தில் நீலாடை எடுத்த அவள் மேனி நீலாற்றுடன் சங்கமிக்க பாஸ்கர் பாறையில் நின்றே பார்த்துக்கொண்டிருந்தான். அவனால் அவளைப் பார்க்கமுடிந்தது. ஆனால் இவனால் முடியாமல் மீனா! என்று உரத்துக் கத்தினான். அருகில் உறங்கிக் கொண்டிருந்த மீனா குழந்தையைப்போல் அணைத்துக்கொண்டே கனவிலும் நானா என்றாள். அந்த நடு இரவில் நாணத்தை மறைக்கப் போர்வையால் இறுக்கி மூடிக்கொண்டான்.

மீனாவின் நீண்ட விரல்கள் முகத்தை மூடியிருந்த போர்வையை நீக்கியது. ஆனால் அவன் உள்ளத்தை மூடியிருக்கும் போர்வையை அவளால் நீக்க முடியவில்லை. ஏதோ கதைக்க எண்ணிய அவள் உதடுகள் ஓசை வராமலே இரண்டு தடவைகள் ஆடி ஓய்ந்தன.

ஏதோ பேசப்போகிறாய்போல இருக்கிறதே என்றான் அவன். அவளும் ஆமா என்று தலையசைத்துக் கொண்டே நெஞ்சுக்குள் துணிவை வரவழைத்துக் கொண்டாள்.

என் இன்ப வாழ்விற்காக வேண்டாம் என் செல்வங்களின் இல்லை எங்கள் செல்வங்களின் இன்ப வாழ்விற்காகவாவுதல் நீங்கள் மதுவை மறந்து வாழ முடியாதா? பின்னர் தந்தையைப் பார்த்தல்லவா தனயனும் பழகி விடுவான். அதற்கு நீங்கள்தான் காரணமாக இருப்பதை விரும்புகிறீர்களா? இல்லை உங்கள் மனச்சாட்சிதான் இடம் கொடுக்குமா? சொல்லுங்க அத்தான் சொல்லுங்க.

''அதுதானே மீனா குழந்தைகள் எல்லாம் நல்ல குணம் படைத்தவங்களாகத்தானே இருக்கிறாங்க. பின் ஏன் உனக்கு அதைப்பற்றிய கவலை.''

அத்தான்! இப்பொழுது குழந்தைகள் எல்லாம் வெள்ளை உள்ளம் படைத்தவங்களாகத்தான் இருப்பாங்க. ஏன்! எங்க வீட்டில் இருக்குதே கோழிகள் அவை எத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனை நிறம் உடையனவாகக் காணப்படுகின்றன. இவற்றில் கறுப்புக் கோழி இட்டாலும் முட்டை வெள்ளைதான்; வெள்ளைக் கோழி இட்டாலும் முட்டை வெள்ளைதான். ஆனல் அவை பொரித்த பின்தான் தம் பெற்ரேர்களுடைய நிறத்தைக் காட்டிக்கொள்கின்றன. பின்னரும் அவை எல்லாம் வெள்ளையாகத்தான் இருக்க வேண்டும் என்ற நியதி இல்லையே. அதுபோலத்தான் அத்தான் நம்ம குழந்தைகளும். இப்பொழுது முட்டை போல்தான் இருப்பாங்க. உலகம் நன்கு அறிந்தபின் அதில் உங்களைப்போன்ற நான்கு மனிதருடன் பழகிய பின்புதான் அவர்களுடைய சுயகுணம் தெரியும் அது வரை வெள்ளையுள்ளம் படைத்தவங்களாகத்தான் இருப்பாங்கள். பின்னரும் அப்படியென்ற நியதி இல்லையே!

மீனு! ''நீ சொல்லுவதும் சரிதான்.''

மீனுவின் கணவனின் இதயத்தில் பாஸ்கர் என்ற முள் தைத்தபின் அவன் கதையில் ஆனல் என்று ஒரு சொல் வந்தால் அதன்பின் நிச்சயம் பாஸ்கரைப்பற்றிய விடயம்தான் வரும்.

சிறிது நேரம் கண்களை இறுக்க முடிக்கொண்டான். பின் நெற்றியில் படர்ந்துகிடந்த மயிரைக் கைகளால் வாரியபடியே ''நான் மதுவைத் தொடாமல் விடுகின்றேன் ஆனல்...... நீ எனக்கு ஒன்று செய்யவேண்டும்.''

''என்னத்தான் சொல்லுங்கள்; என்னுயிரை வேண்டும் என்ருலும் கொடுக்கத் தயாராக இருக்கின்றேன்.''

# பொது அறிவுப் போட்டி இல 3.

## சரியான விடை

1. சூது 2. பால் 3. கறை 4. நரி 5. மாடு 6. படி

சரியான விடை அனுப்பிய மூவரும் புத்தகப் பரிசுகளைப் பெறுகின்றனர்.

ஆ. பூங்குன்றனுர், ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை.
சுமங்கலா நடரர்சா, பெருங்காடு அ. மி. பாடசாலை, புங்குடுதீவு.
குளோறி புஷ்பராணி, பட்டிருப்பு ம. வி. களுவாஞ்சிக்குடி.

ஒரு பிழையுடன் விடையனுப்பிய 12 பேரும் ஆனி மாத வெற்றிமணிப் பிரதியை இலவசமாகப் பெறுவர்.

த. பங்கயற் செல்வன், மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை.
மா. ஞானப்பிரகாசம், புனித மைக்கேல் கல்லூரி, மட்டுநகர்.
சி. சிவராஜா, தேவரையாளி இந்துக் கல்லூரி கரவெட்டி.
துரை சிவராஜன், ,, ,, ,, ,,
மு. சோமாஸ்கந்தன், இந்துக் கல்லூரி, இரத்மலானை.
ந. அஜந்தா, பட்டிருப்பு ம. வி. களுவாஞ்சிக்குடி.
சி. வசந்தினி, ,, ,, ,,
அ. ஶ்ரீதரன், இந்துக் கல்லூரி, திருகோணமலை.
எம். என். சபியுல் அமீர், குமாரிமுல்லை அ. மு. பாட. பூகொடை.
எஸ். எல். மிஸ்ரியா உம்மா, கலப்பிட்டிய முஸ்லீம் பாடசாலை.
இரா. புவனகுமாரி, 7ஆவது கோட்டக்கொடை, ஸ்பிறிங்வல்லி.
செ. சுதர்கர், சென்ற் யோண் கல்லூரி, யாழ்ப்பாணம்.

## பேனு நண்பர் சங்கம்

எஸ். ஏ. அப்துல் கப்பார் (வயது 13)
C/O எஸ். செய்னுலாப்தீன் த. ஆ.
அல்ஹம்ரு வீதி, மருதமுனை - 2, கல்முனை.

தமிழ், ஆங்கிலம் அறிந்தவர். உதைபந்தாட்டம் இவருக்குப் பிரியமான விளையாட்டு. முத்திரை சேகரித்தல், பத்திரிகை வாசித்தல் இவரின் பொழுதுபோக்குகள். இருபாலாரும் எழுதலாம்.

எஸ். கே. ராஜா, 'சிவ அகம்'
வட - கோவை, கோப்பாய்.

தமிழ், ஆங்கிலம், சிங்களம் அறிந்தவர். கிரிக்கட் விளையாடுவதில் திறமையுடையவர். இயந்திரவியல் பற்றிய அறிவு வளர்ச்சியில் விருப்புடையவர். கதைகள் வாசித்தல் இவரின் பொழுதுபோக்கு. ஆண் பெண் இருபாலாரும் எழுதலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.


நங்கையர் விரும்பும் நவநாகரீக
* நகைகளுக்கும் * வைரங்களுக்கும்
புகழ்பெற்று விளங்கும் ஸ்தாபனம

கே. என். எம்.

# மீரான் சாஹிப்

— தங்கப்பவுண் நகைமாளிகை —

கன்னாதிட்டி தொலைபேசி: 585 யாழ்ப்பாணம்.

# K. N. M. Meeran Sahib

JEWELLERS & DIAMOND MERCHANT

— SOVEREIGN PALACE —

Kannathiddy, *Dial:* 585 JAFFNA.



## ஔவையாரின் அறிவு நூல்கள்

15 மில்க்வைற் நீலசோப் மேலுறைகளை அனுப்பி பின்வருவனவற்றில் ஒன்றைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

1. ஆத்திசூடி (உரையுடன்)
2. கொன்றை வேந்தன் (உரையுடன்)
3. நல்வழி (உரையுடன்)
4. சிவபுராணம் (உரையுடன்)
5. தேவாரப் புத்தகம் ஒன்று

மற்றும் இதர பரிசுகளுக்கு மில்க்வைற் தயாரிப்புகளின் மேலுறைகளைச் சேகரியுங்கள்.

**மில்க்வைற் சோப் தொழிற்சாலை**

தபாற் பெட்டி இல. 77

**யாழ்ப்பாணம்.**


இப் பிரசுரம், சக்தி அச்சகத்தினருக்காக, யாழ். ஸ்ரான்லி வீதியிலுள்ள சக்தி அச்சகத்தில், பொன். இராசரத்தினம் அவர்களால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org